Hale & Healthy HOSPITAL
Multi Speciality Since 1987
A1, Srinivasapuram, ECR, Thiruvanmiyur, Chennai - 600 041.
Contact
044-43090397/ 9677194440

# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper - Weekly

*Free Circulation*

நாவில் நடனமாடும் சுவைக்கு
GANGA SWEETS
PURE GHEE SWEETS
Contact
4264 5911 / 2615 4635

VOL - 4 ISSUE - 35 Editorial : 044-42077328 / 7305837388

## கிரீன் வேளச்சேரி சார்பாக நடைபெற்ற 20,000 மரக்கன்றுகள் நடும் விழா...





கிரீன் வேளச்சேரி சார்பாக 17/02/2023 அன்றைய தினம் 240 மரங்கள் நடப்பட்டது அதனுடன் சேர்த்து 20040 மரங்கள் நடப்பட்டுள்ளன அன்றைய நிகழ்ச்சியில் புலம்பெயர்ந்த தமிழர்கள் நலவாரிய தலைவர் திமுக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் மற்றும் அயலக தமிழர் நல வாரிய தலைவர்தமிழ்நாடு அரசு ***திரு. கார்த்திகேய சிவ சேனாதிபதி*** அவர்கள் கலந்து கொண்டு 20040 வது மரங்களை நட்டு பூர்த்தி செய்தார் இதில் ரோட்டரி சங்கம் அபெக்ஸ் கிளப் கிரீன் வேளச்சேரி நண்பர்கள் கலந்து கொண்டனர் இதில் பத்து வகையான மரங்கள் உள்ளன புங்கை மரம் வேம்பு பூவரசு நாவல் பல நீர் வருது இலுப்பை கொய்யா வாகை தூங்கு வாகை நெல்லி என்று பத்து வகையான மரங்கள் உள்ளன இதுனால் 2350 டன் ஆக்சிஜன் கிடைக்கிறது 500 டன்டைஆக்சைடு குறைகிறது கிட்டத்தட்ட 80 ஆயிரம் பேருக்கு ஆக்ஸிஜன் அளித்து உபயோகமாக இருக்கிறது. பல்லுயிர் பெருக்கத்துக்கு கிரீன் வேளச்சேரி அமைப்புக்கு உதவி செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.





## தரமணி, வேளச்சேரி, பெருங்குடி உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் குடிநீர் நிறுத்தம்...

சென்னைக் குடிநீர் வாரியம்
CHENNAI METRO WATER

சென்னை வேளச்சேரி-தாம்பரம் சாலையில் மடிப்பாக்கம் விரிவான குடிநீர் வழங்கல் திட்டத்திற்கான இணைப்பு பணி, நெம்மேலியில் உள்ள கடல்நீர் சுத்திகரிப்பு குடிநீர் குழாய் இணைப்பு பணி மற்றும் வெட்டுவான் கேணி தேவாலயத்திற்கு எதிரில் துரைப்பாக்கம் திட்ட இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதன் காரணமாக சனிக்கிழமை 25-ந்தேதி காலை 6 மணி முதல் 26-ந்தேதி காலை 9 மணி வரை பகுதி 13, 14 மற்றும் 15-க்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் வினியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது. ஆடையாறு பகுதிக்கு உட்பட்ட தரமணி, கோட்டூர் கார்டன், ஆர்.கே.மட்டம் தெரு, வேளச்சேரி இந்திரா நகர், பெருங்குடிக்கு உட்பட்ட கொட்டிவாக்கம், பாலவாக்கம், பெருங்குடி, பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், புழுதிவாக்கம் பகுதியில் குடிநீர் வராது. மேலும் ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, அக்கரை, வெட்டுவான் கேணி, சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி, ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் குடிநீர் சப்ளை நிறுத்தப்படுகிறது.

எனவே பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசர தேவைக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் வினியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் வழங்கப்படும் என்று குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

## குடிநீர், கழிவு நீர் திட்டத்தை வேகப்படுத்த வேண்டுகோள்...

துரைப்பாக்கம்: சோழிங்கநல்லூர் தொகுதி, அனைத்து குடியிருப்போர் நலச்சங்கங்களின் பேரமைப்பு சார்பில், துரைப்பாக்கத்தில் செயற்குழுக் கூட்டம் நடந்தது. இதில், 30க்கும் மேற்பட்ட சங்கங்களில் இருந்து நிர்வாகிகள் பங்கேற்றனர்.



கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள்:

பெருங்குடி கிடங்கில், புதிதாக குப்பை கொட்டுவதை தடை செய்ய வேண்டும். அடுக்குமாடி குடியிருப்பில் குப்பை சேகரிப்பில் உள்ள பாரபட்சத்தை களைய வேண்டும்.

மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறை சார்பில் நடைபெறும் மழைநீர் வடிகால் மற்றும் கால்வாய் கட்டும் பணியை வேகப்படுத்த வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதியில், பல இடங்களில் கம்பங்களில் உள்ள மின் கம்பிகளால் விபத்து அபாயம் ஏற்படுகிறது. மின்கம்பிகளை, கேபிள் வழியாக பூமிக்கடியில் பதிக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதியில், 7.5 லட்சம் மக்கள் தொகை உள்ளதால், இங்கு, அரசு பொது மருத்துவமனை அமைக்க வேண்டும்.

துரைப்பாக்கம் - கிழக்கு கடற்கரை சாலை திட்டத்திற்காக, அரசு மேல்நிலைப் பள்ளி இடிக்கப்பட்டது. மாற்று இடம் வழங்கவில்லை. இதனால், பள்ளி கட்டமைப்பை மேம்படுத்த முடியவில்லை. மாற்று இடம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின் உபயோக கட்டணத்தை, மாதம் ஒரு முறை கணக்கீடு செய்யும் வகையில், மின் வாரியம் நடவடிக்கை வேண்டும்.

சோழிங்கநல்லூர், பெருங்குடி மண்டலங்களில், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டம் துரிதமாக நடைபெறவில்லை. இதனால், குடிநீர், கழிவு நீர் பிரச்னை அதிகமாக உள்ளது. பணியை வேகப்படுத்தக் கோரி, மார்ச் 12ம் தேதி, உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## *BOOK RELEASE FUNCTION...*

Book release function held on 23/02/2023 at Ranjani Hall , Nanganallur. Atmalabham written by Sri. Thyagaraja Dikshtar. Ramayana Gatyam written by Sri. Sivaramakrishna Sastrigal .Bhagavata catussati written by Sri. Sivaramakrishna Sastrigal. Books were released by Sri. P.R. Kannan and Dr.K.S. Maheswaran Nambootri.Books were received by Srimati Saraswathi, Srimati Rajam and Srimati Thangam grand daughters of the authors.



# CLASSIFIED

**Commercial Space for Rent**
600 Square feet for 15,000/-@ ground floor
*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery ( Bethel Hr Sec School Opp )*
3 month rent as advance
CONTACT 8015427018

**WANTED**
Front Desk Executive
*(Male / Female)*
Ateliers Fitness Velachery, Behind A2b
*Contact* **9841030772**

**TMS YOGA AND ART'S CENTER**
SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE
*Contact*
9789098094
8012041624
9500090445
Velachery, Madippakkam, Keelkatalai.


**DESIGNING**
Tamil & English DTP designing works Rs. 750/- only
*Contact* **7305837388**

**Commercial Space for Rent**
850 Square feet for 27,000/- @ ground floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
2 L as advance
CONTACT 7305837388

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

**Mother Land**
*Play School, Day Care & After School Care*
*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*
*Contact*
**72992 62185**
**90947 52300**

**WANTED**
*Tele Callers*
CONTACT **7305837388**




**WOMAN'S WELLNESS YOGA CENTRE**
**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு ரூ குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால்இ ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் ரூ தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க ரூ அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

**CONSULTANT CATERING HOSPITALITY SERVICE**
**NFC**
NIMS FOOD CONSULTANT
E. KAMESH KUMAR IHM-MBA
Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117
Adviser:K.VIJAYA KANCHANA MSC Food & Nutrition.
email:Nutritionnfc@gmc
Mobile:9790 902400
email:Consultantnfc@gmail.com

**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்** Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் 102.63 | ₹ விலை 1 லிட்டர் 94.24 |

**NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY**
Online Class for Women and Kids
*FOR ALL AGE CATEGORIES*
*CONTACT* **89391 53560**

**DESIGNING**
Tamil & English DTP designing works Rs. 500/- only
*Contact* **7358182075**

**WANTED**
LADIES TAILOR
**PRASUDRA Boutique**
No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY
*CONTACT - PREMALATHA*
**4435504719**
**8870393999**

**சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 5235 | 1 கிராம் | 5597 |
| | 8 கிராம் | 41880 | 8 கிராம் | 44776 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 70.90 | | |
| | 1 கிலோ | 70900 | | |

Friday Price

**TUITION CENTRE @ Velachery**
**Baby Nagar**
*For Students Till 9th Grade of Any Syllabus*
*Contact* **909 494 7285**

**Butter Flies**
Beauty Parlour & Beauty Training Institute
Recognised by Tamilnadu Governmen
Ladies & Kids Only
Consultant: Beauty tip & women empowerment (adviser)
No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com
**80560 87391**
**81247 02731**

**SHARAN TRAVELS**
All kinds of Tourist vehicle available here
Drivers Available
Contact V. Marimuthu
**9840508030**

**RENTAL**
LAND BUYING, SELLING
All Kind of Building Repair Works Undertaken
Contact B. Rajendran
**90809 94500**

**SERVICES**
Plumbing works
Contact Govindaswamy
87544 09752

ஆன்மீக தகவல்

# அஷ்டமி, நவமியில் நல்ல காரியங்களைத் தவிர்ப்பது ஏன்?

பஞ்சாங்கம் என்றால் ஐந்து அங்கங்களைக் கொண்டது. திதி, நட்சத்திரம், வாரம், யோகம், கரணம் ஆகியவை சேர்ந்ததே பஞ்சாங்கம் என்று அழைக்கப்படுகின்றது. உலகத்தில் இருக்கும் அனைத்து உயிரினங்களுக்கும் தேவையான அனைத்து ஆற்றல்களையும் வழங்குவதற்காக, உயிர்ச் சக்தி தருவதற்காக சூரியனையும், மன வலிமை தருவதற்காக சந்திரனையும் படைத்தார். அவர்களின் பணிக்காலத்துக்கான வரையறையையும் ஏற்படுத்தினார்.

சூரிய சந்திரர்கள் தங்கள் பணியை செய்துவந்தனர். சிறிது காலம் சென்ற பிறகு சந்திரன் தன் கடமைகளைச் செய்வதில் அசட்டையாக இருந்து வந்தான். இதன் காரணமாக பூமியில் இருக்கும் உயிரினங்கள் தங்களுக்குச் சந்திரனிடம் இருந்து கிடைக்கவேண்டிய ஆற்றல்கள் கிடைக்காமல் மிகவும் சோர்ந்து போனார்கள்.

சந்திரனின் இந்தப் போக்கு சிவபெருமானுக்குத் தெரியவரவே அவர் சந்திரனை அழைத்து எச்சரித்தார். அப்போது மனோகாரகனான சந்திரன், ஐயனே, என்னை மன்னிக்கவேண்டும். தொடர்ந்து பணி செய்வதால், என் உடலும் மனமும் மிகவும் சோர்ந்து போகின்றன. எனவே, என் பணிக்காலத்தில் எனக்கு குறிப்பிட்ட இடைவெளியில் ஓய்வு தேவைப்படுகிறது. அப்போதுதான் என் பணிகளை நல்ல விதமாகச் செய்யமுடியும் என்றான்.

சந்திரனிடம் இரக்கம் கொண்ட சிவபெருமான், சந்திரனின் வேண்டுதலை ஏற்றுக்கொண்டார். அதன்படி சந்திரன் தன் பணிக்காலத்தில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ள அனுமதித்தார். ஆனாலும், சந்திரனிடம் நம்பிக்கை இல்லாமல், சந்திரனின் பணிகளைப் பார்வை இடுவதற்காக சிலரை நியமிக்கவும் செய்தார். அவர்களுக்கான பணிக் காலத்தையும் நிர்ணயம் செய்தார். அவர்களே திதிகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் வளர்பிறையில் சுபர்களாகவும், தேய்பிறையில் அசுபர்களாகவும் கருதப்படுகின்றனர்.

இதன்படி சந்திரனுக்கு ஒருநாள் முழுவதும் முழுநேரப் பணியும், ஒருநாள் முழுவதும் முழுநேர ஓய்வும் கிடைத்தது. சந்திரனின் முழுநேரப் பணிநாளை கவனிக்க பௌர்ணமி திதியும், முழுநேர ஓய்வின்போது சந்திரனின் ஓய்வுக்குத் தொந்தரவு வராமல் கவனித்துக்கொள்ள அமாவாசை திதியும் ஒதுக்கினார் சிவபெருமான்.

அமாவாசை என்னும் சந்திரனின் ஓய்வு நாளுக்குப் பிறகு சந்திரனின் வேலைகளை படிப்படியாக அதிகரிக்கும்படிச் செய்தார் சிவபெருமான். அந்த பதினான்கு நாள்களில் சந்திரனின் பணிகளை மேற்பார்வை செய்ய 14 பேர்களை நியமித்தார். அவர்களே பிரதமை, துதியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி என்னும் திதிகள் ஆவர். சந்திரனின் ஓய்வுக்குப் பிறகு வரும்போது இந்தத் திதிகள் வளர்பிறை திதிகள் என்றும், சந்திரனின் முழுநேரப் பணிக்குப் பிறகு இவர்கள் வரும்போது தேய்பிறை திதிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இந்தத் திதிகளில் பௌர்ணமி திதி, தனக்கு ஒருநாள் முழுக்க சந்திரனின் பணிகளை மேற்பார்வை இடும் பொறுப்பை கொடுத்துவிட்டதாகவும், அமாவாசை திதி, தனக்கு ஒருநாள் முழுவதும் சந்திரனின் ஓய்வுக்கு இடைஞ்சல் வராமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பைக் கொடுத்து விட்டதாகவும் வருத்தப்பட்டன. இவர்களின் வருத்தம் இப்படி இருக்க, மற்ற 14 திதிகள் தங்களுக்கு வளர்பிறை, தேய்பிறை என்று இரண்டு நாள்கள் பணியைக் கொடுத்துவிட்டதாக வருந்தின.

அவர்கள் அனைவரின் கவலையை அறிந்த சிவபெருமான், """சந்திரனின் பணிகளை மேற்பார்வை இடும் நீங்கள் திதிகள் என்று அழைக்கப்படுவீர்கள். அனைத்து நற்செயல்களுக்கும் சங்கல்பம் செய்துகொள்ளும்போது உங்கள் பெயரும் கட்டாயம் சொல்லப்படும். காலக் கணக்கை நிர்ணயம் செய்வதில் நீங்களும் முக்கியத்துவம் பெறுவீர்கள். அதன்மூலம் உலகத்தில் உங்களுக்கு மிகுந்த மதிப்பு உண்டாகும்""" என்று அனுக்கிரகம் செய்தார்.

இந்தக் காலக்கட்டத்தில்தான் உலக மக்கள் அஷ்டமி மற்றும் நவமியை ஒதுக்கி வைக்கும்படியான நிலைமை அந்தத் திதிகளுக்கு ஏற்பட்டது. காரணம், திதிகளின் கடமை மற்றும் அவைகளின் பெருமை ஆகியவற்றைப் பற்றி சிவபெருமான் விளக்கிக் கொண்டிருந்தபோது, அஷ்டமி, நவமி ஆகிய திதிகள் கவனிக்காமல் அசட்டையாக இருந்துவிட்டன. அவைகளின் அசட்டையைப் பார்த்த சிவபெருமான், """என் வார்த்தைகளை கவனிக்காமல் இருந்த உங்கள் இரண்டுபேரையும் ஒதுக்கி வைப்பார்கள். உங்களுடைய நாள்களில் சுபநிகழ்ச்சிகளை நடத்தமாட்டார்கள்""" என்று சாபம் கொடுத்து விட்டார்.

அஷ்டமியும் நவமியும் தங்கள் தவற்றினை உணர்ந்து, தங்களை மன்னிக்கும்படி பிரார்த்தித்தன. அவைகளிடம் இரக்கம் கொண்ட சிவபெருமான், """நான் கொடுத்த சாபத்தில் இருந்து நான் மீறமுடியாது. ஆனால், நீங்கள் இருவரும் விஷ்ணுமூர்த்தியிடம் சென்று பிரார்த்தனை செய்யுங்கள். உங்களுக்கு வேறுவிதத்தில் நல்ல பலன் கிடைக்கலாம்""" என்று கூறினார்.

அந்தத் திதிகளும் அப்படியே விஷ்ணுவிடம் சென்று பிரார்த்தித்தன. அவைகளின் குறையைத் தீர்க்கவே, விஷ்ணு அஷ்டமியில் கண்ணனாகவும், நவமியில் ராமனாகவும் அவதரித்து, அஷ்டமி, நவமி திதிகளுக்குப் பெருமை சேர்த்து அருள்புரிந்தார்.

---

விவசாயம் காப்போம்

# ஊசிமல்லி (முல்லை) பயிரிடும் முறை மற்றும் பயன்கள்

முல்லைப்பூ கொடிவகையை சார்ந்த தாவரமாகும்.இது இந்தியா, இலங்கை, தாய்லாந்து, மியான்மர் போன்ற நாடுகளில் காணப்படுகிறது.

இதன் பூக்கள் நறுமணமுடையவை. பெண்கள் பூவினை தலையில் சூடிகொள்ளவும், நறுமண பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றன. தமிழகத்தில் முல்லைச் வீடுகளிலும், தோட்டங்களிலும் பந்தலிட்டு வளர்க்கின்றனர்.

எப்படி பயிரிடுவது?

இரகங்கள் :

முல்லையில் ஆம்பூர் முல்லை, ஆற்காடு முல்லை, பச்சை முல்லை, குட்டை கூர்முனை, குட்டை வட்டமுனை, நடுத்தர கூர்முனை, நீண்ட கூர்மனை, நீண்ட வட்ட முனை என உள்ளூர் வகைகள் பல உள்ளன. அதைதவிர பாரிமுனை, கோ 1, கோ 2 இரகங்களும் உள்ளன.

பருவம்:

ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை நடவுக்கு ஏற்ற மாதங்கள் ஆகும்.

மண்:

செம்மண், களிமண், கரிசல்மண் ஆகியவை ஊசிமல்லி சாகுபடிக்கு ஏற்றவை.

நிலம் தயாரித்தல் :

நிலத்தை நன்கு உழுது 30 செ.மீ நீளம், அகலம் மற்றும் ஆழம் உள்ள குழிகளை தயார் செய்ய வேண்டும். பின்பு குழிக்கு 10 கிலோ தொழு உரம் இட்டு மண்ணுடன் நன்கு கலந்து ஆற விடவேண்டும்.

விதையளவு:

ஒரு எக்டரில் பயிரிட 1,000 செடிகளும், அடர் நடவு முறையில் பயிரிடுவதற்கு 4,000 செடிகளும் தேவைப்படும்.

விதைநேர்த்தி:

10 லிட்டர் தண்ணீரில், 300 மில்லி பஞ்சகாவ்யா கலந்து 8 மாத வயது கொண்ட முல்லைப் பதியன்களை அக்கரைசலில் நனைத்து விதைநேர்த்தி செய்ய வேண்டும்.

விதைத்தல்:

வரிசைக்கு வரிசை 1.5 மீட்டர், செடிக்குச் செடி 1.5 மீட்டர் இடைவெளியில் குழியின் மையப்பகுதியில் விதைநேர்த்தி செய்த பதியன்களை நடவு செய்ய வேண்டும்.

நீர் நிர்வாகம்:

நட்டவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். 7-ம் நாளில் புதுத்துளிர் வளர ஆரம்பிக்கும். பிறகு, வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

உரங்கள்:

இயற்கை உரமிடல் முறையில் 60-ம் நாளில் ஒவ்வொரு செடிக்கும் 5 கிலோ கோழி எரு வைத்து, கிளறிவிட வேண்டும். 20-ம் நாளில் இருந்து தொடர்ச்சியாக 20 நாட்களுக்கு ஒரு முறை 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி பஞ்சகாவ்யா, தலா 10 மில்லி வீதம் சூடோமோனஸ், டிரைக்கோடெர்மா விரிடி, வேம் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து தெளிக்க வேண்டும். சேயற்கை உரமிடல் முறையில் செடி ஒன்றிற்கு தழைச்சத்து 120 கிராம், மணிச்சத்து 240 கிராம் மற்றும் சாம்பல் சத்து 120 கிராம் தரக்கூடிய உரங்களை 6 மாத இடைவெளியில் இருமுறை கொடுக்கவேண்டும்.

பாதுகாப்பு முறைகள்:-

களை நிர்வாகம்:

20 நாட்களுக்குப் பிறகு 6 மாதங்களுக்கு ஒரு முறைகுளைகளை அகற்ற வேண்டும். செடிகள் வளர்ந்து நிழல் கட்டிக்கொண்டால் களை தோன்றாது. ஜனவரி மாதத்தில் தரைமட்டத்திலிருந்து 45 செ.மீ உயரத்தில் வெட்டிவிட்டு கவாத்து செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் பக்கிளைகள் அதிகமாக தோன்றும். பின்னர் உரமிட்டு நீர்ப் பாய்ச்சவேண்டும்.

சிவப்பு சிலந்திப்பூச்சி:

சிவப்பு சிலந்திப்பூச்சியை கட்டுப்படுத்த நனையும் கந்தகம் 2 கிராம் மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும்.

பூ மொட்டு புழு:

பூ மொட்டு புழுவை கட்டுப்படுத்த மோனோகுரோட்டோபாஸ் 2 மில்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும்.

அறுவடை:

மே - நவம்பர் மாதங்களில் பூக்கள் பூக்க ஆரம்பிக்கும். நன்கு வளர்ந்த மொக்குகளை காலை வேளையில் பறிக்கவேண்டும்.

மகசூல்:

ஒரு எக்டருக்கு 10,000 கிலோ பூ மொக்குகள் வரை மகசூல் கிடைக்கும்.

பயன்கள்:-

முல்லைப்பூவின் சாறு பிழிந்து 3 துளி மூக்கில் விட தீராத தலைவலிகள் தீரும்.முல்லைப்பூவின் சாறு 2 அல்லது 3 துளிகள் கண்ணில் விட்டு வர கண்பார்வை குணமாகும்.

ஒரு கைப்பிடி அளவு முல்லைப் பூவை நீர் விட்டுக் காய்ச்சி பாதியாக வற்றியதும் 15 மில்லி அளவு குடித்து வர மாதவிடாய் கோளாறுகள் குணமாகும்.


முல்லை மலரை தலையில் சூடிக் கொண்டு, அதன் மணத்தை முகர்ந்தால் மனவியாதிகள் நீங்கி மனத்தெளிவு உண்டாகும் என்றும் கூறப்படுகிறது.

# உதவாத நண்பர்கள்

குழந்தைகள் கதை

ஒரு காட்டுல நிறைய மிருகங்கள் வாழ்ந்துகிட்டு இருந்துச்சு ,அதுல ஒரு முயல் குட்டிக்கு நிறைய நண்பர்கள் இருந்தாங்க

எப்பவும் அந்த முயல்குட்டி அதோட நண்பர்கள் கூடவே இருக்கும் ,என்ன நிகழ்ச்சி நடந்தாலும் தன்னோட நண்பர்கள் கிட்டயே நேரத்தை செலவிடும்.







ஒருநாள் அந்த காட்டுக்கு ஒரு வேட்டைக்கார கும்பல் வந்துச்சு ,அவுங்க நிறைய வேட்டை நாய்கள் வச்சிருந்தாங்க ,





அந்த நாய்கள் எல்லாம் மிருகங்களை தொரத்தி வேட்டைக்காரங்க பிடிக்க உதவி செஞ்சுகிட்டு இருந்துச்சுங்க



கொஞ்ச நேரத்துக்கு அப்புறமா இந்த முயல் குட்டிய அந்த வேட்டை நாய்கள் பாத்துடுச்சுங்க. உடனே அந்த நாய்கள் எல்லாம் முயலை தொரத்த ஆரம்பிச்சதுங்க

உடனே அந்த முயல் தன்னோட மான் நண்பர்கிட்ட ஓடிப்போயி என்ன காப்பாத்துங்க மான் நண்பரேனு சொல்லுச்சு ,அதுக்கு மான்குட்டி என்னால முடியாதுனு சொல்லிடுச்சு

அடுத்தத்தா பக்கத்துல இருந்த குரங்கு நண்பர் கிட்ட போயி காப்பாத்த சொல்லுச்சு ,அதுக்கு குரங்கும் என்னால முடியாதுனு சொல்லிடுச்சு



அடுத்து கரடி நண்பர்கிட்ட போயி காப்பாத்த சொல்லுச்சு ,அதுவும் என்னால முடியாதுனு சொல்லிடுச்சு.

அதுக்கு அப்புறமாத்தான் முயலுக்கு தோணுச்சு ஒரு ஆபத்துனு வரும்போது தன்னோட நிலைமையை தான்தான் சரி பண்ணிக்கிடனும் இன்னொருத்தர நம்பக்கூடாதுனு தோணுச்சு

உடனே பக்கத்துல இருக்குற அடர்ந்த புதற்குள்ள போயி,ஆடாம அசையாம உக்காந்துகிட்டு இருந்துச்சு ,அந்த வேட்டை நாய்கள் கொஞ்ச நேரம் தேடிட்டு போயிடுச்சுங்க



அதுக்கு அப்புறமா நண்பர்களை பொழுது போக்குக்கு மட்டும் வச்சுக்கிட்டு ,முழுமையா நம்புறதை விட்டுட்டு ரொம்ப நாள் வாழ்ந்துச்சு அந்த முயல்

## சென்னையில் திடீர் நில அதிர்வு? ஊழியர்கள் அலறியடித்து ஓட்டம்...



சென்னை அண்ணாசாலையில் அருகே உள்ள ஒயிட்ஸ் சாலையில் வங்கி மற்றும் 2 கட்டிடங்களில் நில அதிர்வு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அண்ணாநகரிலும் சில இடங்களில் உள்ள கட்டிடங்களில் நில அதிர்வு உணரப்பட்டதால் ஊழியர்கள் வெளியேறினர்.

சென்னை அண்ணா சாலையில் உள்ள கட்டிடங்களில் நில அதிர்வு உணரப்பட்டதாக அங்கிருக்கும் வாசிகள் தெரிவித்துள்ளனர். இந்த நில அதிர்வு குறித்து தேசிய மையத்தின் இணையதளத்தில் அதிகாரப்பூர்வமாக எதுவும் பதிவாகவில்லை.

சென்னையில் நில அதிர்வு ஏற்பட்டதாக தகவல் வெளியான நிலையில் தங்களது பணிகள் காரணமில்லை என மெட்ரோ ரெயில் ரெயில் நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.

## பொன்மொழி

**உலகில் உள்ள எல்லா இதயங்களும் நல்ல இதயங்களே.. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலைகள் அதை மாற்றியமைக்கின்றன.**

## ALTERNATIVES

- ***Very Accurate - Exact***
- ***Very Angry - Furious***
- ***Very Bad - Awful***
- ***Very Boring - Dull***
- ***Very Calm - Serene***



Dr.Mrs. Y. Deepika,
M.Sc.,Ph.D.,
Delhi Public School,
Nacharam,Telangana,
India.




# இயற்கை மருத்துவம் குறிப்புகள்

◆விளாம்பழம் கிடைக்கும் காலங்களில் தினசரி ஒன்று சாப்பிட்டால் பித்தத்தைக் குறைக்கலாம்.

◆ சுக்கு, பால், மிளகு, திப்பிலி வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட்டால் தொண்டை கரகரப்பு குணமாகும்.

◆உப்பு நீரை வாயில் வைத்து தொண்டை வரை படும்படி வாய் கொப்பளித்து வந்தால் தொண்டை வலி குணமாகும்.

◆முற்றிய வெண்டைக்காயை சூப் செய்து குடித்து வந்தால், இருமல் உடனே நிற்கும்.

◆கோதுமை கஞ்சியை மாதவிடாய் இருக்கும் காலங்களில் சாப்பிட்டு வந்தால், உடற்சோர்வு நீங்கி பலம்பெறும்.

◆தேங்காய் பால் அடிக்கடி சாப்பிட்டு வர ஆண்மை பெருகும், தாது விருத்தியாகும்.

◆பூண்டு, வெங்காயம் அதிகம் உணவில் சேர்த்து வந்தால் தேவையற்ற கொழுப்பு குறையும்.

◆கரும்பு தோகையை எரித்து சாம்பலாக்கி வெண்ணெயுடன் கலந்து உதட்டு வெடிப்புக்குப் போட்டால் உடனே குணமாகும்.


◆அல்லி இதழ்களை சந்தனத்துடன் சேர்த்து அரைத்து இரவில் முகத்தில் பூசி காலையில் குளித்து வர முகப்பருக்கள் ஒழியும்.

◆எலுமிச்சம்பழத்தின் சாறை ஓரிரு துளிகள் காதில் விட காது வலிதீரும்.

◆தேனில் ஊறவைத்த நெல்லிக்காய் தினசரி ஒன்று சாப்பிட்டு வர நுரையீரல் பலப்படும்.

◆முற்றிய வெண்டைக்காயை சூப் செய்து குடித்து வந்தால் இருமல் உடனே நிற்கும்.

[ 739 ] **திருக்குறள்**



நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

A land is land which yields unsought
Needing hard work the land is nought.






# இந்த வார ராசிபலன்



**மேஷம்**

இந்த வாரம் வீட்டு பிள்ளைகளுக்கு படிப்பில் ஆர்வம் குறையும். இதன் காரணமாக அவர்கள் அதிக நேரத்தை டிவி பார்ப்பதில் செலவிடுவார்கள்.



**ரிஷபம்**

உங்கள் ஒழுக்கம் மற்றும் கடின உழைப்பின் வலிமையால் ஒவ்வொரு ராஜதந்திர யுக்தியையும் ஊடுருவி வேலை செய்யும் இடத்தில் வெற்றியை அடைவீர்கள்.



**மிதுனம்**

இந்த வாரம் உறுப்பினர்- களிடையே சகோதரத்துவத்தை அதிகரிக்கும். உங்கள் பெற்றோரும் உங்கள் இயல்புடன் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.



**கடகம்**

இந்த வாரம் வேலை செய்யும் இடத்தில் எல்லாம் உங்களுக்கு எதிராக இருக்கும், மேலதிகாரிகள் , முதலாளி கூட உங்கள் மீது கோபப்படக்கூடும்.



**சிம்மம்**

இந்த வாரம், நீங்கள் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு, குழந்தை பருவத்தில் நீங்கள் செய்த விஷயங்களைச் செய்ய விரும்புவீர்கள்.



**கன்னி**

இந்த வாரம் ரியல் எஸ்டேட் அல்லது கலாச்சார திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும். இந்தத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு சிறந்த கலவையாகும்.



**துலாம்**

இந்த வாரம், நீங்கள் உங்கள் பணியிடத்திலிருந்து சீக்கிரம் வீட்டிற்கு வர முயற்சிப்பீர்கள், அதில் நீங்கள் வெற்றியையும் பெறுவீர்கள்.



**விருச்சிகம்**

இந்த வாரம் உங்களை நல்ல உற்சாகத்துடனும் வைத்திருக்கும். பதவி உயர்வு அடிப்படையில் பல பெரிய வாய்ப்புகளை உங்களுக்கு வழங்கப் போகிறது.



**தனுசு**

இந்த வாரம் உங்கள் வருமானம் எவ்வளவு வேகமாக பெருகுமோ, அவ்வளவு வேகமாக அந்த பணம் உங்கள் முஷ்டியில் இருந்து நழுவுவதைக் காணலாம்.



**மகரம்**

இந்த வாரம் குடும்பத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். உறுப்பினர்களிடையே நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவ உணர்வு வளரும்.



**கும்பம்**

இந்த வாரம் நிதி வாழ்க்கையின் நிலையை நன்றாக அழைக்க முடியாது, பணம் தொடர்பான பல சிரமங்களை சந்திக்க வேண்டியிருக்கும்.



**மீனம்**

இந்த வாரம் பல மாணவர்கள் தங்கள் தொழில் சம்பந்தமாக குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து கூடுதல் அழுத்தத்திற்கு ஆளாக நேரிடும்.

# YOGASANAM

## ஹலாசனம்

**பலன்கள்:-**

முதுகுத்தண்டை நீட்சியடையச் செய்வதோடு, அதன் நெகிழ்வுத்தன்மையை அதிகரித்து பலமடையவும் செய்கிறது



முதுகுத் தசைகளைப் பலப்படுத்துகிறது

முதுகுவலியைப் போக்க உதவுகிறது

நுரையீரலைப் பலப்படுத்துகிறதுளூ ஆஸ்துமா உள்ளிட்ட மூச்சுக் கோளாறுகளைச் சரி செய்கிறது

தைராய்டு மற்றும் பாராதைராய்டு சுரப்புகளின் இயக்கத்தை மேம்படுத்துகிறது

இளமையான தோற்றத்தைத் தருகிறது

ஆற்றலை அதிகரிக்கிறது

வயிற்று உள்ளுறுப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துகிறது

தொப்பையைக் கரைக்கிறது

இடுப்பு மற்றும் தொடையில் உள்ள அதிக சதையைக் கரைக்கிறது

உடலின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது

உடல் முழுவதிலும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது

நரம்பு மண்டலத்தைப் பலப்படுத்துகிறது

தலைவலியைப் போக்குகிறது

தூக்கமின்மையை சரி செய்கிறது

கழிவுகளை வெளியேற்ற உதவுகிறது

குழந்தையின்மை குறைப்பாட்டை சரி செய்கிறது

கால்களைப் பலப்படுத்துகிறது

மாதவிடாய் நேரத்தில் ஏற்படும் வலிகளைப் போக்குகிறது

உடல் சோர்வைப் போக்குகிறது

நினைவாற்றலை அதிகரிக்கிறது

கவனத்தைக் கூர்மையாக்குகிறது

மன அழுத்தத்தைப் போக்குகிறது

## சுளுக்கை குணப்படுத்த உதவும் வீட்டு வைத்தியங்கள்...

கல் உப்பின் பயன்பாடு:

கல் உப்பு தசை வலி மற்றும் தசைப் பிடிப்பைக் குறைக்க உதவுகிறது. கல் உப்பில் அதிக அளவில் மெக்னீசியம் நிறைந்திருப்பதால், இது வீக்கத்தை நீக்குகிறது. வெதுவெதுபான நீரில் சிறிதளவு கல் உப்பு சேர்த்து குளிப்பதன் மூலம் வலியிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது. மேலும், பாதிக்கப்பட்ட பகுதியில் பான்டேஜ் பயன்படுத்துவதன் மூலம் சுளுக்கிலிருந்து விரைவில் விடுப இயலும்.

ஆமணக்கு எண்ணெயின் பயன்பாடு:

ஆமணக்கு எண்ணெய் எலும்புகளில் உண்டாகும் வீக்கம், சுளுக்கு மற்றும் வலியைக் குறைக்க உதவுகிறது. ஆமணக்கு எண்ணெயை சுத்தமான துணியில் ஊற்றி சுளுக்கினால் பாதிக்கப்பட்ட பகுதியில் தடவவும். பின்னர் சூடான நீரில் துணியை நனைத்து சுளுக்கு உள்ள பகுதியில் ஒத்தனம் கொடுப்பதும் நன்மை அளிக்கும். இந்த செயல்முறையை சுளுக்கு நீங்கும் வரை தினசரி செய்யவும்.

## மலையேற்றப் பயிற்சியில் என்னென்ன செய்யலாம்?

மலையில் நடைப்பயிற்சி செய்யும் பொழுது சாதாரண முறையில் நடைப்பயிற்சி செய்வதைத் தவிர இன்னும் சில சுவாரசியமான முறைகளில் பயிற்சி செய்யலாம்.

மலையில் ஓட்டப் பயிற்சி:-

சமதரையில் ஓடவதை விட ஏற்றம் மற்றும் இறக்கங்களில் ஓடுவது மேலும் சிறந்த பலன்களைத் தரும்.

ஸ்வீடனில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் வாரம் இரு முறை என பன்னிரண்டு வாரங்களுக்கு தொலைதூர ஓட்ட வீரர்கள் மலையில் ஓட்டப்பயிற்சி செய்ததன் மூலம் ஒரு மராத்தன் ஓட்டத்தை வழக்கத்தை விட மூன்று நிமிடங்கள் குறைவாக முடிக்கும் திறன் பெற்றது நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு ஆய்வின் மூலம் மலையில் ஓட்டப்பயிற்சி செய்வதால் பிராணவாயு அதிகரிப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

பின்னோக்கி மலையேறுதல் மற்றும் இறங்குதல்:-

மலையேற்றத்திலும் இறக்கத்திலும் பின்னோக்கி நடப்பதால் கூடுதல் நன்மைகள் கிடைப்பதாக பல்வேறு ஆய்வுகள் அறிவிக்கின்றன.

இது குறித்து செய்யப்பட்ட ஆய்வு ஒன்றில், ஏற்றத்திலும் இறக்கத்திலும் பின்னோக்கி நடப்பதால் கால் தசைகள் பலப்படுவதாகவும், முட்டி சார்ந்த பிரச்சினைகள் தீருவதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் சம தரையில் பின்னோக்கி நடப்பதை விடவும் ஏற்றத்திலும் இறக்கத்திலும் பின்னோக்கி நடப்பது தசையியக்கத்தை மேலும் கூட்டி கால் தசைகளை வலுவாக்குவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

படிக்கட்டுகளைப் பயன்படுத்துதல்:-

நீங்கள் செல்லும் மலையில் சாலைகள் தவிர மலையுச்சியை அடைய படிக்கட்டுகளும் இருந்தால் அவற்றையும் நீங்கள் பயன்படுத்தலாம்.

சிறிய மலையாயிருந்தால் மலைப்பாதையில் ஏறி உச்சியை அடைந்த பின் படிக்கட்டுகள் வழியாகக் கீழிறங்கி மேலே வந்து மீண்டும் மலைப்பாதை வழியாகக் கீழே இறங்கலாம். இது பயிற்சியின் தீவிரத்தைக் கூட்ட உதவும்.

மேடாக உள்ள பகுதிகளில் ஓடுதல், பின்னோக்கி நடத்தல் என மலையேறும் பயிற்சியை மேலும் சுவாரசியமாக்குவதும் பலன்களைக் கூட்டுவதும் நம்மிடம் தான் உள்ளது. மலையில் பல வழிப்பாதைகள் இருந்தால் ஒரு புறமாக ஏறி இன்னொரு புறமாக இறங்குவதும் பயிற்சியின் தீவிரத்தை அதிகப்படுத்தும்.

இந்த மலையில் நாங்கள் வேக நடையில் ஏற சுமார் 8 நிமிடங்கள்தான் ஆகிறது. ஆனாலும் இதில் ஒரு மணி நேரம் வரையில் மேற்கூறிய முறைகளில் நாங்கள் நடைப்பயிற்சி செய்கிறோம்.

சிறிய மலையோ பெரிய மலையோ, உச்சியை அடைந்ததும் காணக் கிடைக்கும் காட்சி நம் அன்றைய நாளின் பயிற்சிக்குக் கிடைத்த வெற்றியே.

பசுமைக்கிடையில் நகர்ப்புறவளர்ச்சிக்கான அடையாளமும் தெரிகிறது. நகரமயமாக்குதல் இயற்கையை உள்ளடக்கியதாக இருப்பது நம் ஆன்மாவுக்கு மட்டுமல்ல, பூமியின் ஆன்மாவிற்கே வேர் போன்றது.

# Entertainment Corner

## Arusuvai Samayal

## VEG KOLHAPURI

### INGREDIENTS :-

2 Carrots chopped
4 Potatoes chopped
1/4 cup Beans chopped
3 tbsp Green Peas
1/2 cup Cauliflower chopped
1 tsp Red Chilli Powder
1/2 tsp Turmeric Powder
3 to 4 Onions finely chopped
4 Tomatoes finely chopped
few Coriander Leaves chopped
1/2 inch Ginger
3 to 4 Garlic Cloves
1 tbsp Oil
as per taste Salt

**To Grind:**

1/3 cup Kopra (Dry Coconut)
2 tsptsp Coriander Seeds
10 Cloves
4 to 5 Dry Red Chillies
1 tsp Black Peppercorns
1 tsp Feenel
2 tsp Sesame Seeds
2 tsp Gasa Gasa (Khus Khus)
1 inch Cinnamon
3 to 4 Bay Leaf
1 tsp Cumin Seeds
2 Cardamoms
2 tbsp Oil

### INSTRUCTIONS:-

Add the carrots, potatoes, beans, peas and cauliflower to a pressure cooker.
Pour enough water and pressure cook until 2 to 3 whistles or until cooked.
Heat 2 tblsp of oil in a pan.
Add the ingredients for grinding and fry for a minute.
Remove, cool and grind to a smooth paste.
Grind the ginger and garlic to a coarse paste.
Heat oil in a large pan over medium flame.
Add the ginger garlic paste and stir-fry for a minute.
Add the onions, red chilli powder, turmeric powder and saute until onions turn golden, about 3 to 5 minutes.
Add tomatoes and salt.
Stir well and cook until the oil starts to separate.
Add the ground paste and 3/4 to 1 cup of water.
Stir well and cook for 4 to 5 minutes.
Add the cooked vegetables and simmer for another 4 to 5 minutes.
Keep stirring from time to time.
Garnish with coriander leaves.
Remove from flame.
Serve as a side dish with rice, roti, paratha or naan.


## SUDOKU ANSWER

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 7 | 4 | 9 | 1 | 6 | 2 | 5 |
| 2 | 4 | 1 | 5 | 6 | 8 | 3 | 7 | 9 |
| 5 | 6 | 9 | 3 | 2 | 7 | 4 | 1 | 8 |
| 7 | 5 | 8 | 6 | 1 | 9 | 2 | 3 | 4 |
| 1 | 2 | 3 | 7 | 8 | 4 | 5 | 9 | 6 |
| 4 | 9 | 6 | 2 | 5 | 3 | 1 | 8 | 7 |
| 9 | 3 | 4 | 1 | 7 | 6 | 8 | 5 | 2 |
| 6 | 7 | 5 | 8 | 3 | 2 | 9 | 4 | 1 |
| 8 | 1 | 2 | 9 | 4 | 5 | 7 | 6 | 3 |

## SUDOKU GAME

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | | | | | 1 |
| | 7 | | | 6 | | | 5 | |
| 8 | | | 1 | | 3 | 2 | | |
| | | 5 | | 4 | | 8 | | |
| | 4 | | 7 | | 2 | | 9 | |
| | | 8 | | 1 | | 7 | | |
| | | 1 | 2 | | 5 | | | 3 |
| | 6 | | | 7 | | | 8 | |
| 2 | | | | | | 4 | | |

## CROSSWORD PUZZLE ANSWER




## சென்ற வார சொல் விளையாட்டு விடைகள்

1.விலங்கு 2.திங்கள்
3.வெள்ளி 4.மை
5.கரி

## விடுகதை விளையாட்டு

1. வேகாத வெயிலில் வெள்ளையப்பன் விளைகிறான் -அது என்ன?

2. கழுத்து உண்டு தலையில்லை உடல் உண்டு உயிர் இல்லை கையுண்டு விரல் இல்லை -அது என்ன?

3. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் ஒரு தூசி கிளம்பாது -அவை யாவை?

4. ஆகாயத்தில் பறக்கும் அக்கம் பக்கம் போகாது -அது என்ன?

5. ஆறு எழுத்துள்ள ஓர் உலோகப் பெயர் அதன் கடை மூன்று எழுத்துகள் சேர்ந்தால் ஒரு கொடிய பிராணி -அது என்ன?

6. அண்டமென்ற பெயரும் உண்டு அடைகாத்தால் குஞ்சுமுண்டு -அது என்ன?

7. வந்தும் கெடுக்கும் வராமலும் கெடுக்கும் -அது என்ன?

8. பூமியிலே பிறக்கும் புகையாய்ப் போகும் -அது என்ன?

9. தலையை சீவினால் தாகம் தீர்ப்பான் -அவன் யார்?

10. ஆயிரம் பேர் வந்து சென்றாலும் வந்த சுவடு தெரியாது? -அது என்ன?

## சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1. நுங்கு 2. அகப்பை
3. முட்டை 4. கடிதம்
5. கல்வி 6. முருங்கைமரம்
7. உப்பு 8. கத்தரிக்காய்
9. புகை 10. வியர்வை


Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Designer : D. Deepa
Journalist : P. Praveen
Marketing Executive : C. Karthikeyan

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**


Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

TNBIL04133 R.Dis.No.1845/2014


# CHUTTIES CORNER

## தனித்திறமை பகுதி





**Joshua Daniel**
Class 5
St. Theresa Bacq
Public School,
Bangalore.





**Joel Osteen**
Class 2
St. Theresa Bacq
Public School,
Bangalore.

## PAPER CRAFT




## படத்தில் உள்ள 07 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!



## MEHNDI











Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH